அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:266/2015
தேதி:03.11.2015

# தமிழர்க மீனவர்களின் உரிமையைக் காக்க மத்திய அரசு தவறிவிட்டது தீபாவளி பண்டிகை கால மகிழ்ச்சித் தருணத்தில் மீனவர்களின் குடும்பங்கள் தவித்து நிற்பார்கள்!.. மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுத்து மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சமத்துவ மக்கள் கட்சி நிறுவனர் – தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை

*இலங்கை சிறையில் வாடும் 86 மீனவர்களை விடுதலை செய்ய இருக்கிறோம் என்று அறிவித்த இலங்கை அரசு, மேலும் மேலும் மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.*

*மேலும் இலங்கையின் எல்லைக்குள் மீன் பிடிக்கும் படகுகளை கைப்பற்றுவோம் 15கோடி, 25 கோடி அபராதம் விதிப்போம் என்றெல்லாம் மனம் போன போக்கில் அறிவித்து வருகிறார்கள்.*

*இலங்கை அரசு தமிழக மக்களின் வேண்டுகோளையும், தமிழக மீனவர்களின் வேண்டுகோளையும் தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன்பிடிப்பு பகுதிகளில் மீன் பிடிக்க அனுமதித்தால் மட்டுமே இந்த பிரச்சனைக்கு ஒரு தீர்வு ஏற்படும். அந்த தீர்வை உருவாக்குவதற்குரிய பொறுப்பு மத்திய அரசுக்கு மட்டுமே இருக்கிறது. மத்திய அரசு, மீனவர்களின் வாழ்வாதாரத்தோடு விளையாடும் இலங்கையை அழைத்துப் பேசி ஒரு நல்ல தீர்வு காண வேண்டியது மிக மிக அவசியமாகும்.*

இன்னும் எத்தனை ஆண்டுகள் தான் இது போன்ற இரண்டுங்கெட்ட நிலையில் நம் மீனவர்கள் தொழில் செய்ய முடியும். உயிருக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பின்றி எப்படி தொழில் செய்ய முடியும். ஒவ்வொரு இந்திய குடிமகனும் சுதந்திரமாக வாழ, தொழிலில் ஈடுபட தேவையான அடிப்படையை உருவாக்கி பாதுகாக்க வேண்டியது ஒரு ஜனநாயக அரசின் கடமையாகும். மீனவர்களின் பிரச்சனையை பொறுத்த வரை அந்த கடமையிலிருந்து மத்திய அரசு தவறி விட்டது.

இது தீபாவளி பண்டிகை காலம். நாட்டு மக்கள் மகிழ்ச்சியான தருணத்தில் இருக்கும்போது இலங்கை சிறையில் மீனவ சகோதரர்கள் வாடும் போது அவர்களது குடும்பங்கள் மட்டும் தவித்து நிற்பார்கள். பண்டிகையை கருதியாவது இலங்கை சிறையில் வாடும் மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு உடனடியாக தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சி சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்